
NAVEEN
எதிர்பாராதது

# கரும்பு

(சிறுவர் வாரப் பத்திரிகை)

---

பிஞ்சு நெஞ்சிலே அறிவு
விதை தூவி வரும்
தமிழகத்தின்
தலை சிறந்த
சிறுவர் வார இதழ்.

## கரும்பு

கரும்பு தின்றால் வாய் இனிக்கும்.
கரும்பு படித்தால் கருத்து இனிக்கும்.

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6—0—0 |
| தனிப் பிரதி | ரூ. 0—2—0 |

கரும்பு
த. பெ. எண் 275,
சென்னை-1

## கதைச் சுருக்கம்

சுந்தர் சென்னை காலேஜில் படிக்கும் மாணவன். வாலிபத்தின் வாசலிலே நிற்கும் அவன் இதயத்திலே காதல் மலர்கிறது. சுமதி என்னும் சுந்தரியிடம் தன் மனதை பறிகொடுக்கிறான். ஆனால் சுந்தர் ஒரு விமான விபத்திற்கு ஆளாகிறான். இறந்தவர் பட்டியலிலே சுந்தரின் பெயரும் இடம் பெறுகிறது. ஆனால் சுந்தர் இறக்கவில்லை. காட்டு மனிதர்களால் காப்பாற்றப்பட்ட அவன் கண்களை இழந்து குருடனாகிறான். இந் நிலையிலே ஊருக்குப்போக விரும்பாமல் அனாதையாக திரிகிறான்.

தயாபரர், தன் செல்வ மகன் சுந்தர் விபத்திலே இறந்ததை அறிந்துத் துடிக்கிறார். தன் மகனின் நினைவை மறக்க மதுரையை விட்டு வெளியேறி திருச்சியில் குடியேறுகிறார். இங்கு அவருடைய வாழ்க்கையில் ஒரு புது திருப்பம் ஏற்படுகிறது. அவர் ஒரு இளம் பெண்ணை திருமணம் செய்துக் கொள்கிறார். முதலிரவிலேயே அவர் ஒரு பயங்கர உண்மையை அறிய நேரிடுகிறது. தான் மணந்து கொண்ட பெண் தன் மகனின் காதலி என்பதை உணர்கிறார். வேதனை தாங்காமல் வீட்டைவிட்டு வெளியேறுகிறார். செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடி ஊர் ஊராக அலைகிறார். மற்றுமோர் திருப்பம். இறந்துவிட்டதாக நம்பிய செல்வ மகனை பிச்சைக்காரனாக குருடனாக சந்திக்கிறார். பாசம் இருவரையும் பிணைக்கிறது. தந்தையை சந்தித்த மகன், சுமதியையும் சந்திக்க விரும்புகிறான். உண்மையை உணராத மகனின் ஆவலை நிறைவேற்ற தயாபரர் உடன்படுகிறார். ஆகவே அவனை திருச்சிக்கு அழைத்து வருகிறார்.

டாக்டர் கோபு சுமதியின் அண்ணன. நளினி என்னும் நாகரீக மங்கையை மணந்த அவன், தங்கையோடும் தந்தையோடும் வாழப் பிரியப்படாமல் தன் மனைவியோடு பெங்களூர் சென்று தொழில் நடத்துகிறான். ஆடம்பரத்திற்கு அடிமையான அவன், சகவாச தோஷத்தினால் பெரிய சூதாடி ஆகிறான். கடன் அவன் கழுத்தை இறுக்கும் சமயம் திருந்துகிறான். பலன், கடனுக்கு பயந்து எங்கோ தலைமறைவாக ஓடுகிறான்.

நளினி கோபுவின் மனைவி - குடும்பத்தை மறந்து நாகரீகப பாதையிலே நடந்து நடந்து நாசமாகிறாள். சமூகத்திலுள்ள சில சண்டாளர்கள், அவளை களங்கப்படுத்த முயற்சிக்கின்றனர். தன் போக்கினால் ஏற்படும் விபரீதத்தை அவள் உணர்கிறாள். குடும்பத்தின் நிலையை சீர்திருத்த முடிவுசெய்கிறாள். ஆனால் கடன் தொல்லையால் அவதிப்பட்ட அவள் கணவன், அவளை அனாதையாக்கிவிட்டு ஓடிவிடுகிறான். அவள் வேறு வழியின்றி, சுமதியின் ஆதரவை நாடுகிறாள். சுமதி அவளுக்கு அடைக்கலம் தருகிறாள்.

சுமதி! இளமையும் எழிலும் நிரம்பிய யுவதி. சுந்தரின் காதலி...களங்கமற்ற முறையிலே வளரும் தன்காதலில், காட்டாறுகள் குறுக்கிடாதென்று கனவு கண்டாள். அமெரிக்கா செல்லும் தன் காதலன் பெரும் புகழோடு திரும்பிவந்து, தன்னை மணம்புரிவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவளுக்கு கிடைத்த செய்தி, சுந்தர் விபத்திலே இறந்தான் என்பதுதான். அழுதாள், துடித்தாள், கதறினாள், காதலனுடனே அவள் காதலும் செத்துவிடுகிறது. இந்நிலையிலே அனாதையாக வந்த அண்ணிக்கு அடைக்கலம் தருகிறாள். அண்ணனின் கடனைத் தீர்க்க எந்தவித தியாகத்தையும் செய்ய முன் வருகிறாள்.

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவளை தயாபரரின் மனைவியாக்குகிறது. இத் திருமணத்தின் மூலம், அண்ணனின் கடனைத் தீர்க்கிறாள். கணவனே தெய்வம் என்று வாழ நினைக்கிறாள். செய்த தவறை உணர்ந்த அவள் கணவன், அவளை விட்டு எங்கோ போய் விட்டதை அறிகிறாள். எதையும் தாங்கும் இதயம் படைத்த அவளுக்கு கணவனின் பிரிவு அதிர்ச்சியை தரவில்லை.

தன்னால் வஞ்சிக்கப்பட்ட சுமதிக்கு தன் மகன் மூலம் புனர் வாழ்வளிக்க பாடுபடுகிறார் தயாபரர்.

பாழடைந்த - பாலைவனமாக்கப்பட்ட - சுமதியின் வாழ்வு, தென்றல் வீசும் சோலைவனமாக வேண்டும் என விரும்புகிறான் சுந்தர்......

தன் குடும்ப நலனுக்காக எதிர்காலத்தையே தியாகம் செய்த சுமதி தன்னைப்போல் வாழமாட்டாளா? என்று ஏங்குகிறாள் நளினி.

தன் நலனுக்காக வாழ்க்கையை தியாகம் செய்த தன் தங்கைக்கு, மறுமணம் செய்துவைக்க பாடுபடுகிறான் டாக்டர் கோபு...

பெண்மையின் பிறப்பிடமான சுமதியின் வாழ்வு மலரவேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புகிறார்கள். ஆமாம்—சுமதியின் மனம் மலர்ந்தது. எவரும் எதிபாராத விதமாக! எப்படி என்பதை வெண்திரையில் பாருங்கள்.

சினிமா பாட்டு, வசனப் புத்தகங்கள், அம்மானை தினுசுகள், அரசியல் ஏடுகள், நாவல் தினுசுகள் முதலியன கிடைக்கும்

ஸ்ரீ மகள் கம்பெனி

சென்னை - மதுரை - கோவை - நெல்லை

# "எதிர்பாராதது"

## பாட்டு 1.

பல்லவி

மதுராபுரி ஆளும் மஹாராணியே—தென் (மது)

அநுபல்லவி

மலயத்வஜன் செய்த மஹத்தான தவத்தாலே
மகவாக உடல் தாங்கி ஜெகம் வாழ வந்தவளே (மது)

சரணம்

செந்தமிழால் வைகைத்திரு நதி புகழ் பாட
தேவரெல்லாம் உனது திருவடித் துணை நாட
சுந்தர பாண்டியன் உன் சுடர் விழி தனைக்கண்டு
சொக்கித் திருவிளையாடல்கள் திக்கெட்டிலும் புரிந்தேவர (மது)

அன்பு வலை தனில் அகப்படும் ஆரமுதே
அருள் மழை பொழிந்திடும் அங்கையற் கண்ணமுதே
இன்னிசைக் கவியாலே பொன்னடி தொழும் நெஞ்சம்
எண்ணும் வரம் எல்லாம் கடைக் கண்ணால் தரும்
மீனாட்சியே (மது)

## பாட்டு 2.

பல்லவி

ஜெகம் ஏழும் நீயே அம்மா—பெற்ற
தாயின்றி உயிரேதம்மா—இந்த (ஜெகம்)

அநுபல்லவி

பகலேது இரவேது படைக்கின்ற தொழிலேது
பாராளும் அன்னை பராசக்தி இல்லாது (ஜெகம்)

சரணம்

உலகெங்கும் உனதானை விளையாடுதே
ஒளி வீசும் நிலவில் உன்கலை வீசுதே
அலைகடல் உன் பாத புகழ் பாடுதே—உன்
அருள் வெள்ளம் தனில் ஏழை—என்
உள்ளம் நீந்துதே (ஜெகம்)

## பாட்டு 3.

பல்லவி

சிற்பி செதுக்காத பொற் சிலையே
...ந்தன் சித்தத்தை நீ அறியாயோ (சிற்பி)

அநுபல்லவி

அற்ப செயலுக்கு இப்படியும்
மன அவஸ்தைப் பட விடுவாயோ (சிற்பி)

சரணம்

கற்பனைக் கெட்டாத அற்புதங்கள் தன்னை
காண்பதும் உன் செயலாலே
கற்கண்டு பாகு கனிரசத்தேனும்
கசந்திடும் உன் மொழியாலே (சிற்பி)

## பாட்டு 4.

தொகையரு

கம்பவுண்டர் வேலையிலே கல்தா கொடுத்ததாலே
பலகாரத் தள்ளுவண்டி தள்ளி வந்தேன் இந்த நாளே
தின்னு பாத்துத் தீர்ப்புச் சொல்லுங்க நீங்க (தி)

கத்தரிக்கா பஜ்ஜி முதல் காரம் இனிப்பு எல்லாத்தையும்
தின்னு பார்த்துத் தீர்ப்புச் சொல்லுங்க திருப்தி இல்லேன்னு
திரும்பக் காசை வாங்கிக் கொள்ளுங்க—நீங்க (தி)

உண்ணுவோர்க்கு நோய்கள் வராது சுகாதார முறையை
உத்துப் பார்த்துச் செய்த வகையிது—பசு
வெண்ணெ காய்ச்சிப் பாகம் செய்தது. பால்கோவா முதல்
பர்ப்பி குஞ்சாலாடு மிருக்குது. எல்லாத்தையும் (தி)

வாங்க தம்பிகளா?...... சரக்கைப் பாருங்க, புத்தம்
புதுசா கம கமண்ணு இருக்கு, இதை விட்டுட்டு.

சாலையோரம் சோலையோரம் சரிஞ்சுபோன பிளாட்டு பாரம்
சரக்குகளை வாங்காதீங்க தம்பிகளா—பிளாட்டு பாரம் (சாக்)
தூக்கித்திரியும் (சாக்)

அந்தச்

சரக்குக்குள்ளே பலதுமிருக்கும் தம்பிகளா—அதனால்
காலை மாலை கால் கடுக்க டாக்டர் வீடுதேடி
ஊசி போடாதீங்க தம்பிகளா—நீங்க
ஊசி போடாதீங்க தம்பிகளா—அந்த
வேதனையெல்லாம் இதிலே ஏதுமில்லீங்க—ஆயுர்
வேத முறையாக நளபாகம் செய்த பட்சணத்தை (தி)

வாங்க தாத்தா — முறுக்கான முறுக்கிருக்கு, சாப்பிட்றீங்களா—

கிழவர்: அட, பல்லு இல்லியப்பா—

கந்தசாமி: பல்லு இல்லியா?...... அப்படீன்னு.
ஊறப்போட்ட உளுந்த வடை வேணுமா—தாத்தா (ஊ)
காரங்கடுகு இஞ்சி போட்டு கரிவேப்பிலை கிள்ளிப் போட்டு
கட்டித் தயிரில் தண்ணியை விட்டுக் காலைமுதல் மாலைவரை (ஊ)

## பாட்டு 5.

பல்லவி

கண்ணான காதலர் காலேஜ் மாணவர்
என்னாளும் பிரியாத கண்ணாட்டியாக்க
பெண்ணுன்னைத் தேடி வாராரடி, இதோ வாராரடி (கண்)

அநுபல்லவி

கனியைத் தேடும் அணிலைப்போல—கரை
கணைக் அ[illegible] பாடு கவிவர்—உன்
கன்னத்தைக் கிள்ளி விட்டு ஓடுவார்—
மனம் நாணி நீ முகம் கோணினால்—மண
மாலை சூட்டி லாலி பாடுவார்—சுப லாலி பாடுவார் (கண்)

சரணம்

சின்னஞ் சிறிய கன்னி உன்னை—பெரிய
சீமாட்டி யாக்கிவிடப் போகிறார்—உனக்கு
சிங்கார வாழ்வு தரப்போகிறார்
புது வாழ்விலே தடுமாறினால்
என்னசெய்வார் தெரியுமா?
மடப் பேதை என்று தள்ளிவிடுவார்
உன்னை தள்ளிவிடுவார் (கண்)

## பாட்டு 6.

தொகையறா

திருமுருகா வென்று ஒருதரம் சொன்னால்
உருகுது நெஞ்சம் பெருகுது கண்ணீர் (திரு)

பல்லவி

திருமுருகா வென்று ஒருதரம் சொன்னால்
உருகுது நெஞ்சம் பெருகுது கண்ணீர் (திரு)

அநுபல்லவி

சிறுமதியால் உள்ளம் இருண்டிடும் வேளையில்
அருளொளி வீசும் ஆண்டவன் நீயே (திரு)

சரணம்

அப்பனும் பிள்ளையும் நீ தானையா
அடிப்பதும் அணைப்பதும் உன் கைதானையா

கற்பனை வாழ்வினில் கதியினி ஏது
கருணாநிதியே கதிர் வடிவேலா (திரு)

## பாட்டு 7.

பல்லவி

அன்பின் பெருமை அறியாத தன்மையினாலே
இன்ப வாழ்வை இழந்தேனே நான் புவிமேலே (அன்)

அநுபல்லவி

மாமன் மாமியின் மனம் நோகச் செய்ததும்வீணே அன்றோ
பூமிதேவியை நிகரும் என் நாத்தி மகிழ்வதன்றோ (அன்)
நாகரீக பண்பில்லா வாழ்வால் நாதனைப் பிரிந்தேனே
ஞானமின்றி பெண் தன்மை மறந்து
நாட்டியம் புரிந்தேனே—பேய் நாட்டியம் புரிந்தேனே (அன்)

## பாட்டு 8.

சுமதி: காதல் வாழ்வில் நானே
கனியாத காயாகிப் போனேன் (காதல்)

சுந்தர்: எழில் போன உடலானதாலே
ஏற்பாயோ நீயே முன்போலே
சுழல் போல துயர் சூழ்ந்தபோதும்
நிழல் போல உனை நாடுவேனே (காதல்)

சுமதி: என் காதல் இன்ப ஓடம்
கரை சேரப் போகும் நேரம்
விதியான பேய் காற்றினாலே
வீணானதைய்யோ இந்நாளே (காதல்)

சுந்தர்: நீறாகி உடல் வெந்தபோதும்
நினைவாலென் உயிர் வாழும் நாளும்
வேறாகி நாம் வாழ்ந்த போதும்
விலகாது நம் ஜீவன் கூடும் (காலஸ்)

## பாட்டு 9.

திருச்செந்தில் ஆண்டவனே—முருகா
என மனச்சாந்தி பெற இலைதிரு நீறுதா—கந்தா (திரு)
கடலினலை மோதும் திருக்கோவில் வலம் வந்து
பணிவர்க் கவலை தீர்க்கும்—தேவா (திரு)
குடும்பத் தொல்லை பொறுக்காமல்—ஏழுமலை
இடுக்கில் வந்தொளிந்து கொண்டாயோ—உன் (குடும்)

என் மனம் படும் பாடுனது திருவுளமறியும்
தடங் கருணை மழையே மாலே
அலமேலு மங்கை மணவாளா
கலக்கந்தீர வந்தெனை யாளாய்
பாவியேன் தீவினைக்கு மன்னிப்பும் மாற்றுமுண்டோ
பண்டரிபுர நாயகா
அண்டர் முனிவர் பணி தொண்டர் பஜகாஷம்
முழங்க அருள் பாண்டு ரங்கா—ப்ரபோ
இறங்கியருள் பாண்டுரங்கா

## பாட்டு 10

சுமதி: வந்தது வசந்தம் வந்தது வசந்தம்
வந்தது எந்தன் வாழ்வினிலே
வந்தது எந்தன் வாழ்வினிலே
சுமதி: } வந்தது வசந்தம் வந்தது வசந்தம்
சுந்தர்: } வந்தது நமது வாழ்வினிலே
வந்தது நமது வாழ்வினிலே
சுமதி: அந்தர மாழகை தேடி—என்
சுந்தரன் வந்ததனாலே
தென்றலில் மூழ்கும் தீங்குயில் போலே
சிந்தை பாடுதே—எந்தன் சிந்தை பாடுதே (வந்தது)
சுந்தர்: கானகமெல்லாந் தேடி—என்
கண்ணின் மணியைக் கண்டேன்
இருவரும்: வானும் கடலும் வாழுவரை
வாழ்வோம் ஜோடியாய்—நாமே
வாள்வோம் ஜோடியாய்

## பாட்டு 11.

சிற்பி செதுக்காத பொற்சிலையே
எந்தன் சித்தத்தை நீ அறியாயோ (சிற்பி)
அற்ப செயலுக்கு இப்படியும் மன—
அவஸ்த்தைப் பட விடுவாயோ (சிற்பி)
கற்பனைக் கெட்டாத அற்புதங்கள்—தன்னை
காண்பதும் உன் செயலாலே
கற்கண்டு பாகு கனிரசத்தேனும்
கசந்திடும் உன் மொழியாலே (சிற்பி)

வணக்கம்

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| சிவாஜி கணேசன் | ... | சுந்தர் |
| V. நாகையா | ... | தயாபரர் |
| S. V. சகஸ்ரநாமம் | ... | கோபு |
| பிரண்ட் ராமசாமி | ... | கம்பவுண்டர் கந்தசாமி |
| துரைசாமி | ... | சுமதியின் தகப்பனார் |
| அசோகன் | ... | மோதி |
| நாராயணசாமி | ... | கிட்டு |
| சந்தானம் | ... | புரோக்கர் |
| N. S. பொன்னுசாமி | ... | டாக்டர் பொன்னுசாமி |
| T. K. ராமசாமி | ... | சுந்தரின் நண்பன் |

ஷண்முகம் பிள்ளை, N. சங்கரமூர்த்தி, ஸ்டண்ட் கிருஷ்ணன், வெங்கடராமன், பீர்கண்ணு, பலராமன், நாராயணசாமி.

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| பத்மினி | ... | சுமதி |
| S. வரலக்ஷ்மி | ... | நளினி |
| பேபி சரஸ்வதி | ... | ஆஷா |
| அங்கமுத்து | ... | நோயாளியின் மனைவி |

கமலா, ராஜேஸ்வரி, கனகாம்புஜம், சந்திரகலா.

| | | |
|---|---|---|
| கதை வசனம் | ... | ஸ்ரீதர் |
| லேபரட்டிரி | ... | ஜூபிடர் லேபரட்ரிஸ். |

டைரக்ஷன் — C. H. நாராயணமூர்த்தி

ஸ்டுடியோ: நெப்ட்டியூன், சென்னை-28.

ஸ்ரீமகள் பிரஸ், சென்னை—1

# திரைப்பட வ

## பாட்டுகள

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வேலைக்காரி முழு வசனம் பாடல் | | ... | 0 | 12 |
| ரத்தக்கண்ணீர் | ,, | ... | 0 | 8 |
| காவேரி | ,, | ... | 0 | 8 |
| குடும்பம் | ,, | ... | 0 | 8 |
| வைரமாலை | ,, | ... | 0 | 8 |
| எதிர்பாராதது | ,, | ... | 0 | 8 |
| நல்லதங்கை | ,, | ... | 0 | 8 |
| மிஸ்ஸியம்மா | ,, | ... | 0 | 8 |
| என் மகள் | ,, | ... | 0 | 8 |
| ஓர் இரவு | ,, | ... | 0 | 6 |
| மந்திரி குமாரி | ,, | ... | 0 | 8 |
| பராசக்தி | ,, | ... | 0 | 8 |
| தேவதாஸ் | ,, | ... | 0 | 8 |
| துளிவிஷம் | ,, | ... | 0 | 8 |
| மலைக்கள்ளன் | ,, | ... | 0 | 8 |
| தூக்கு தூக்கி | ,, | ... | 0 | 8 |
| சுகம் எங்கே? | ,, | ... | 0 | 8 |
| கணவனே கண்கண்ட தெய்வம் | | ... | 0 | 8 |
| போர்ட்டர் கந்தன் | ,, | ... | 0 | 8 |
| உலகம் பலவிதம் | ,, | ... | 0 | 8 |
| செல்லப் பிள்ளை | ,, | ... | 0 | 8 |
| முதல்தேதி | ,, | ... | 0 | 8 |
| இருஹ லக்ஷ்மி | ,, | ... | 0 | 8 |
| மேதாவிகள் | ,, | ... | 0 | 8 |

இன்னும் எல்லா வசனப் 'புத்தகங்களும் பாட்டுப் புத்தகங்களும் கிடைக்கும்

## ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை—1

கணேசன்

# கலைமன்றம்

(கலை, இலக்கியக் கிழமை இதழ்)

---

தமிழகத்துப் பெருங்குடி மக்களின்
கலையிலும், இலக்கியத்திலும்
மறுமலர்ச்சியும்,
பழமெருகும்
மின்னி மிளிர
உழைக்க உறுதி பூண்ட
செந்தமிழ்ப்
பத்திரிகை: **கலைமன்றம்**

ஆண்டுச் சந்தா ரூ. 12—0—0
தனிப் பிரதி ரூ. 0—4—0

•

**கலைமன்றம்**
த. பெ. எண் 275,
சென்னை-1